MAY 2023 **P/ID 35326/PTL4S**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க.

1. திருமுருகாற்றுப்படையின் தொடக்கச் சொல்லின் சிறப்பினை எழுதுக.

2. 'பழமுதிர்சோலை மலை கிழவோன்' என நக்கீரர் யாரைக் குறிப்பிடுகிறார்?

3. 'கல்லா இளைஞர்' என முல்லைப்பாட்டு யாரைக் குறிப்பிடுகிறது?

4. போர்க்களத்தில் வேழத்தின் துதிக்கை எவ்வாறு துடித்ததாக முல்லைப்பாட்டு பாடுகிறது?

5. தோழி அறத்தோடு நிற்பதற்கான காரணத்தை எழுதுக.

6. பட்டினப்பாலை பாடிய புலவரையும் பாடப்பட்ட மன்னனையும் பற்றி எழுதுக.

7. "பல்வேறு உருவின் பதாகை நிழல்" எனப் பட்டினப்பாலை எதனைக் குறிப்பிடுகிறது.

8. 'வெய்யகானம்' என பட்டினப்பாலை எந்த நிலத்தைப் பாடுகிறது?

9. ‘வரைதாழ் அருவிப் பொருப்பின் பொருந’ என மாங்குடி மருதனார் யாரைப் பாடுகிறார்?

10. பெரும்பாணர்கள் வாழ்ந்த இடத்தை மதுரைச் காஞ்சி எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

11. பத்துப்பாட்டுள் நெடுநல்வாடையின் சிறப்பினை எழுதுக.

12. நெடுநல்வாடை ‘மாமேயல் மறப்ப’ எனப் பாடியுள்ளது குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

13. சூரர மகளிர் குறித்துத் திருமுருகாற்றுப்படை கூறுவதனை எழுதுக.

14. ‘திருமுருகாற்றுப்படை’ திருவாவினன்குடி முனிவரது இயல்புகளை எங்ஙனம் குறிப்பிடுகிறது?

15. “இன்னே வருகுவர் தாயர்” என முல்லைப்பாட்டு குறிப்பிடுவது குறித்து எழுதுக.

16. குறிஞ்சிப்பாட்டு மாலைக் காலத்தின் வருகையினை எங்ஙனம் விளக்கியுரைக்கிறது?

17. ‘கொழும் பல்குடி செழும் பாக்கம்’ எனப் பட்டினப்பாலை கூறும் சோழநாட்டு வளத்தினை விரித்துரைக்க.

18. மதுரையின் விடியற்காலை நிகழ்வுகளை மதுரைக்காஞ்சி அடிகளின் வழி விளக்குக.

19. நெடுநல்வாடையில் ஊரினது சிறப்பு எங்ஙனம் விரித்துரைக்கப்படுகிறது?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. நக்கீரர் பன்னிரு கைகளின் தொழில்களை எங்ஙனம் விரித்துரைக்கிறார்?

21. முல்லைப்பாட்டு தலைவனின் பெருமைகளை எங்ஙனம் விரித்துரைக்கிறது?

22. 'அளந்தறியாப் பல பண்டம்' எனப் பட்டினப்பாலை குறிப்பிடும் வணிகச் சிறப்பினை விரித்தெழுதுக.

23. மதுரைக்காஞ்சி 'ஒன்னார் ஓட்டிய செருப்புகல் மறவர்' எனக் குறிப்பிட்டுள்ள திறத்தினை விளக்குக.

24. தலைவியின் நிலையினை நெடுநல்வாடை எங்ஙனம் விரித்துரைக்கிறது?

———————